*1*

## வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# தேவனுடைய வழிமுறைகளைப் பின்பற்றுதல்

*ஒரு திருமண நிகழ்ச்சியைப் போன்று அழகானது வேறொன்றுமில்லை: மணமகன் அழகின் உச்சத்தில் காணப்படுகிறார், மணமகளோ எப்போதுமில்லாத வகையில் பேரழகுள்ளவளாயிருக்கிறாள். அழகிய மலர்களும் அலங்காரங்களும் சபைக் கூடத்தை அல்லது மணவிழா நடைபெறுமிடத்தை நிறைத்திருக்கின்றன. பாடல்கள் நேசத்தைப் பறைசாற்றுகின்றன, ஊழியரோ தேவனால் நியமனம் செய்யப்பட்டதோர் அமைப்பைப்பற்றி சொற்பொழிவாற்றுகிறார். மணமகளும் மணமகனும், "மரணம் நம்மைப் பிரிக்கும்வரை" ஒருவரையொருவர் நேசிக்கவும் கனப்படுத்தவும் போவதாக வாக்குறுதிகளை பரிமாறிக் கொள்ளுகின்றனர். நிகழ்ச்சிக்கு பின் வாழ்த்துரைகள் தொடர்கின்றன, அதன் பின்னர் திருமணமான தம்பதியர் "அன்றுமுதல் என்றும் மகிழ்வாக" வாழ்கின்றனர். அப்படியா? பெரும்பாலும் அது அப்படியில்லை!*

*கணவனோ அல்லது மனைவியோ மரணமடையும் பட்சத்தில்தான் திருமண பந்தம் முடிவடையும் என்ற உத்தேசத்தில் மணவிழா நிகழ்ச்சியின்போது பேசப்பட்டிருந்த போதிலும், அதற்கு நேர்மாறாக, அமெரிக்க திருமணங்களில் ஏறக்குறைய பாதி திருமணங்கள் விவாகரத்தில் முடிந்துபோகின்றன. சில மாகாணங்களில் திருமணங்களைவிட விவாகரத்துகள்தான் சகஜமாகி விட்டிருக்கின்றன. தற்காலத்தில், நெடுநாளாய் பார்க்காத ஒருவரை நீங்கள் சந்திக்கையில், "உங்கள் மனைவி (அல்லது கணவர்) எப்படியிருக்கிறார்?" என கேட்பது தர்மசங்கடத்துக்குரியதாயிருக்கிறது. உடனே அந்த நபர், என்னுடைய "முன்னாள் மனைவியைப் பற்றியா (அல்லது முன்னாள் கணவரைப் பற்றியா) கேட்கிறீர்கள்?" என்று பதிலுரைக்கவும் வாய்ப்பிருக்கிறது.*

*பிரச்சனை என்ன? விவாகத்தின் சிங்காரக் கனவுகளெல்லாம் விவாகரத்து நீதிமன்றங்களில் முடிவடைகிறதாயிருக்கும்போது, தப்பு எங்கே நடந்திருக்கிறது? அதிமுக்கியமாக, இத்தகைய முடிவினைத் தவிர்த்திட என்ன செய்யலாம்? நீங்களும் விவாகம்பண்ணிக் கொள்ளும்போது விவாகமுறிவை எவ்விதம் தவிர்த்திடலாம்?*

பொதுவாகச் சொன்னால், விபத்துகளைத் தவிர்ப்பதற்கு நீங்கள் விதி முறைகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். நீங்கள் பயணம் செய்யும்போது வழிதவறிப் போகாமலிருக்க நல்ல வழிகாட்டுதல்களைப் பெற்று, அவற்றை பின்பற்ற வேண்டும். ஒரு டாக்டர் மருந்தெழுதிக் கொடுப்பாரானால் அவரது வழிகாட்டுதலின்படிதான் நீங்கள் மருந்தை சாப்பிடவேண்டும், இல்லையேல் அதன் விளைவுகள் ஆபத்தாக முடியலாம். அதுபோலவே, உங்களது விவாகம் வெற்றிகரமானதாக அமைந்திட, நீங்களும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றியாக

வேண்டும்.

*நீங்கள் பின்பற்றும்படியான சரியான வழிகாட்டுதல்களை யார் உங்களுக்கு அளிக்கக் கூடும்? பல்வேறு சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்படலாம்.*

## உங்கள் பெற்றோர் அல்ல ...

பெற்றோரின் குடும்பத்தில் வளர்ந்து வந்தபோது இருந்த பிரகாரமே தொடர்ந்து வாழ்ந்து வருபவராக நீங்கள் இருக்கலாம். மக்கள் அவ்விதம் செய்ய முனைகிறவர்களாயிருக்கின்றனர். பையன்கள் வழக்கமாகவே, தங்கள் சொந்த தகப்பன்மார்களைப் போன்ற கணவன்மார்களாகவும் அப்பாக்களாகவும், பெண்பிள்ளைகள் வளர்ந்த பிறகு, பொதுவாக தங்கள் அன்னையர் எப்படியிருந்தார்களோ அப்படிப்பட்ட மனைவியராகவும், அன்னையராகவும் தான் இருக்கிறார்கள்.

சில வேளைகளில் நல்ல திருமணங்கள் இதன் விளைவாயிருக்கிறது. நெடுநாள் நிலைத்திருக்கும் திருமணங்கள் குடும்பங்களுக்குள் உருவாகிக் கொண்டிருப்பதாகத் தான் தெரிகிறது. உதாரணத்திற்கு, எனது தயார் 2003ல் எண்பத்தி எட்டு வயதானவர்களாய் மரிப்பதற்கு முன்பு எனது பெற்றோர் அறுபத்து ஒன்பது வருட காலத்திற்கு மேலாக திருமணமானவர்களாய் இருந்திருக்கின்றனர். எனது மனைவியின் தகப்பனார் 1985ல் மரிப்பதற்கு முன்னர் அவர்களது பெற்றோரும்கூட ஐம்பது வருட காலத்திற்கு மேலாக திருமணமானவர்களாய் இருந்திருக்கின்றனர். எனது சகோதரனும் அவரது துணைவியாரும் அவர்களது ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவினை 2004ல் கொண்டாடினர். என் மனைவியும் நானும்கூட அந்த "பொன்னான" தருணத்தை 2008ல் கொண்டாடி மகிழ்ந்தோம். இவையெல்லாம் ஒன்றுபோல எதேச்சையாக நடந்திட்ட விஷயங்களா? அபூர்வமே! நானும் எனது சகோதரனும் மணமானவர்களாக மனைவியருடன் நீடித்திருப்பதற்கு ஒரு காரணம், எங்களது பெற்றோர் மற்றும் எங்கள் மனைவியரது பெற்றோரின் முன்மாதிரி - அவர்களிடமிருந்து அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் கற்றறிந்த விஷயங்களாகத்தான் இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இருந்தாலும், உங்கள் திருமண நிலைப்பாட்டினை உங்கள் பெற்றோரின் அறிவுரை மற்றும் முன்மாதிரியின் அடிப்படையில் வகுத்துக் கொள்வீர்களேயானால், பல காரணங்களை முன்னிட்டு பிரச்சனைகள் எழும்பலாம். (1) ஒருவேளை, திருமணத்தில் வெற்றியுள்ள பெற்றோரை உடையவராயிருக்கும் பாக்கியம் உங்களுக்கு இல்லாமலிருக்கலாம். அப்போது உங்கள் திருமணத்தை செயல்படுத்தக் கற்றுக் கொள்ள யாரை நோக்கிப் பார்ப்பீர்கள்? (2) சில சமயங்களில், பெற்றோர் அல்லது உறவினர்களின் ஆலோசனையானது உங்கள் விவாகத்திற்கு உதவிகரமாயிருப்பதற்கு பதிலாக கெடுதி விளைவிப்பதாக அமைந்துவிடலாம். (3) எந்த திருமணமும், இரு குடும்ப இணைப்பு சம்பந்தப்பட்டதாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதற்குரிய பாரம்பரிய வழக்கங்கள் உண்டு. புருஷன் வீட்டார் மேற்கொள்ளும் மனோபாவங்களும் நடைமுறைகளும் பெண்வீட்டு வழக்கத்தில் இருந்து வந்த முறைமைகளுக்கு முரண்பட்டதாயிருக்குமானால் இந்தப் புதுமணத்தம்பதியர் எந்த நடைமுறைகளைப் பின்பற்றுவது? நம்முடைய சொந்த குடும்பத்திலோ வேற்று குடும்பங்களிலோ உள்ள நல்ல முன்மாதிரிகளுக்கு நாம்

நன்றியுள்ளவர்களாயிருக்கலாமென்றாலும், குடும்பத்தாரின் ஆலோசனையை அப்படியே பின்பற்றுவதென்பது வெற்றியுள்ள விவாகத்திற்கு உத்திரவாதம் அளிக்காது.

## சமூகம் அல்ல ...

மற்றொரு சாத்தியக்கூறு என்னவெனில், வெற்றிகரமான விவாகம் அமைவது எப்படியென்ற குறிப்புகளுக்காக ஒட்டுமொத்த சமூகத்தை நோக்கிப் பார்த்தல். சமூக ஒப்புதல் பெற்ற ஒழுக்க நன்னெறிகளின்படி வாழ்வதென்பது விவாகம் வெற்றிபெற உதவலாம். சில சமூகங்கள் "வேசித்தனத்தை" ("சம்மதிக்கும்" மணமாகாத ஜோடிகளிடையே உள்ள பாலுறவை) கண்டு கொள்ளாத போதிலும், பெரும்பாலானோர் "விபச்சாரம்" என்பது (தனது வாழ்க்கைத் துணைக்கு நம்பிக்கை துரோகம் செய்தல் என்பது) தவறானதாகும் என்று இன்னமும் நம்புகின்றனர். உங்கள் கணவருக்கோ அல்லது மனைவிக்கோ உண்மையாயிருக்கும்படியான கடமையை ஏற்றுக் கொள்வதென்பது உங்கள் விவாகம் பிழைத்திருக்க நிச்சயம் உதவிகரமாயிருக்கும். ஆயினும் தேவனுடைய பார்வையில் விபச்சாரத்தைப் போலவே வேசித்தனமும் பாவமாயிருக்கின்றபடியால், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வழிமுறைகள் ஒவ்வொன்றும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டதென்றோ, உங்கள் விவாகத்திற்கு பயனுள்ளதாயிருக்கும் என்றோ நினைப்பது முற்றிலும் ஆபத்தானது.

மேற்கத்திய நாடுகளில் உயர்ந்து வரும் விவாகரத்து விகிதம் காட்டும் ஆதாரத்தின்படி பார்த்தால் நவீன காலத்து தராதரங்கள் (நியதிகள்) எப்போதும் வெற்றிகரமான விவாகங்களை உருவாக்குவதில்லை எனத் தெரிகிறது. ஏறக்குறைய 50 சதவீத திருமணங்கள் விவாகரத்தில் முடிந்து போகும் பட்சத்தில் உங்கள் திருமணத்தில் நீங்கள் சமூகத்தின் நியதிகளைப் பின்பற்றுவீர்களேயானால், உங்கள் திருமணமும் கூட வெற்றிகரமாய் அமைந்திட 50 சதவீதத்திற்கு மேல் வாய்ப்பில்லை.

மேலும், சமூகத்தின் தராதரங்களைப் பின்பற்றுவதால் ஒரு தம்பதியினரின் விவாகம் தேவனுக்கு பிரியமானதாயிருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. உதாரணத்திற்கு, திருமணம் சம்பந்தப்பட்ட கலாச்சார பழக்க வழக்கங்களில் பின்வரும் விஷயங்களும் உள்ளடங்கியுள்ளன:

- ஓரின சேர்க்கையாளர்களின் திருமணத்தை சிலர் ஒத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.
- சில கலாச்சாரங்களில் பலதார மணம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.[1]
- அமெரிக்காவில், எந்தக் காரணத்திற்கும் விவாகரத்து, காரணமில்லாமலே விவாகரத்து என்பது சகஜமானது தான் என பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

கலாச்சாரத்தின்படி சில வழக்கங்கள் ஏற்புடைடையதாயிருக்கின்ற காரணத்தால் கிறிஸ்தவர்கள் அவைகளில் ஈடுபடலாம்[2] என்று பொருளாகாது. கிறிஸ்தவர்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரித்தலாகாது என்றும் (ரோமர் 12:1, 2), உலகத்தால் கறைபடாதபடிக்கு தங்களை காத்துக் கொள்ள வேண்டுமென்றும் (யாக்கோபு 1:27), உலகத்தில் அன்புகூரலாகாது என்றும்

*(1 யோவான் 2:15-17) வேதபுத்தகம் போதிக்கின்றது. அதாவது, கிறிஸ்தவர்கள் உலகத்தாரைவிட மாறுபட்டவர்களாயிருக்க வேண்டும். பல்வேறு ஜனங்களின் கலாச்சாரங்களை ஆய்வு செய்யும் சமூக அறிவியலாளர் ஒருவேளை அனைத்து திருமண வழக்கங்களுமே சரியானதுதான் என்ற முடிவிற்கு வரலாம், ஆனால் ஒரு கிறிஸ்தவனோ தேவனுடைய வசனத்தைக் கடைபிடிப்பதையே வலியுறுத்த வேண்டும்.*

## *நிபுணர்கள் அல்ல ...*

*கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்வது எப்படி என்பதை அறிந்து கொள்வதற்கான மற்றொரு வழி, "மகிழ்வான மணம்புரிந்திருப்பது எவ்வாறு" என்பதைப் பற்றிய குறிப்புகளை வழங்கிடும் ஏராளமான புத்தகங்கள், கட்டுரைகள் மற்றும் படக்காட்சிகள் ஆகியவையாகும். அடிக்கடி இச்சாதனங்கள், திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கும், புதுமணம் புரிந்தோருக்கும் மிகச்சிறந்த ஆலோசனைகளை வழங்குகின்றன. தங்களது விவாகத்தினை வெற்றியுள்ளதாக்கிட அர்ப்பணித்துள்ள எந்தத் தம்பதியருமே திறமை வாய்ந்த தொழில்ரீதியான ஆசிரியர்கள் மற்றும் ஆலோசகர்களிடம் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*ஆயினும், ஓர் எச்சரிப்பின் வாக்கு இங்குண்டு. தொழில்ரீதியான ஆலோசகர்கள் அநேக நன்மையானவைகளை சொல்பவர்களாயிருந்தபோதிலும் அவர்களே ஒருவருக்கொருவர் முரண்பட்டவைகளைக் கூறிடவும் நேரிடலாம். சிலநேரங்களில் அவர்களது ஆலோசனை செல்லுபடியாகாமற் போகலாம். மனோவைத்திய நிபுணர்களோ, ஒரு கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ "திருப்தி" இல்லாதபட்சத்தில் விவாகத்தை ரத்து செய்து விடுவதில் தவறேதுமில்லை என்ற ஒரு உலக நடைமுறை வழக்கத்தில் பயிற்சி பெற்றவர்களாயிருக்கின்றனர். ஒருவர் நீடித்த விவாகத்தை விரும்புகிறவராயிருந்தால், ஒரு விவாகத்தை ரத்துசெய்துவிடும்படியான ஆலோசனையைப் பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.*

*பிரசித்தி பெற்ற புத்தகங்கள் திருமணத்தைப் பற்றி கூறுவதை நீங்கள் முற்றிலும் புறக்கணித்து விடவோ அல்லது ஊழியக்காரர், போதகர் மற்றும் ஆலோசகர்களின் ஒத்தாசை இருக்கையில் அதை நாடுவதற்கு நீங்கள் மறுக்கவோகூடாது.[3] அந்த விஷயத்தில் உங்கள் பெற்றோரது முன்மாதிரியையோ அல்லது சமூகத்தின் வரைமுறைகளோயோ ஒதுக்கித் தள்ளிவிட முடியாது; ஆனால், இந்த மூலாதாரங்களில் எதுவுமே, விவாகத்தை நீங்கள் கட்டியெழுப்புவதற்கான வழுவாத வழிகாட்டியாக இருப்பதில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நீங்கள் பெறும் அறிவுரை மற்றும் ஆலோசனைகளை பரிசீலனை செய்து அதன்பின், திருமணத்தைப் பற்றி முழுமுடிவான அதிகாரத்தின் அடிப்படையில் அவைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.*

*அந்த அதிகாரம் எது? விவாகத்தை செயல்படுத்துவது பற்றிய உங்கள் கேள்விகளுக்கு முழுமுடிவான பதில் பெற்றோரிடத்திலோ, சமூகத்திடமோ, நிபுணர்களிடமோ இல்லையெனில் வேறு யாரிடத்தில் உள்ளது? நல்ல விவாகம் அமையப் பெறுவது எவ்வாறு என்பதைப் பற்றி அதிகாரப்பூர்வமாக யார்தான் பேசிட முடியும்?*

## ... தேவன்

*அதற்கு பதில் "தேவன்" என்பதுவே! ஒரு வெற்றிகரமான விவாகத்தைக் கட்டியெழுப்புதலைப் பற்றிய சரியான பதில்கள் அனைத்தையும் உடையவர் அவரே. அவரது வழிமுறைகளை நாம் கடைப்பிடித்தாக வேண்டும் என்பதற்கு குறைந்தபட்சம் இரண்டு காரணங்களுண்டு.*

***(1) ஏனெனில் அவரே திருமணத்தின் சிருஷ்டி கர்த்தர்***

*தேவனே சிருஷ்டிகர்த்தர்! அவர் ஆணையும் பெண்ணையும் உண்டாக்கினவர்; ஆகையால் அவர்களது தேவைகளை அவர் அறிந்திருக்கிறார். அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கென்றே அவர் திருமணத்தை ஏற்படுத்தி, பின்பு திருமணத்தில் அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டுமென்பதைக் குறித்து வழிமுறைகளையும் வழங்கினார். ஒரு பொருளை உருவாக்கினவரைவிட அப்பொருள்பற்றி அதிகமாய் யார் தெரிந்திருக்க முடியும்? ஒரு சாதனத்தில் உங்களுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டு, அதனை சீர் செய்திட உங்களுக்கு ஆலோசனை தேவைப்படுமானால், அதிகாரப்பூர்வமான வழிகாட்டுதலுக்காக யாரை நாடுவீர்கள்? அதன் தயாரிப்பாளரைத் தான்! அவ்விதமாகவே விவாகத்தை வெற்றியுள்ளதாக்குவது எவ்வாறு என்பதை மக்கள் அறிய விரும்பினால் அவர்கள் தேவனையும், அவர் இவ்விஷயத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள அவருடைய அதிகாரப்பூர்வமான வசனத்தையும் திரும்பி நோக்கிப் பார்க்க வேண்டியது அவசியம்.*

***(2) ஏனெனில் அவர் கீழ்ப்படிகிறவர்களுக்கு பிரதிபலன் அளிக்கிறவராகவும், கீழ்ப்படியாதவர்களை தண்டிக்கிறவராகவும் இருக்கிறார்***

*தேவனுடைய புத்திமதிகளுக்கு நாம் கீழ்ப்படிவதால் இவ்விடத்திலும், இனிவரப்போகும் இடத்திலும் மகிழ்ச்சி கிடைக்குமென்ற காரணத்தினால், திருமணத்தைப் பொறுத்த தேவனுடைய புத்திமதிகளுக்கு (வழிமுறைகளுக்கு) ஜனங்கள் செவி சாய்த்தாக வேண்டும்[4]. அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமை என்பது தேவனால் உண்டாகும் தண்டனையைக் கொண்டு வருகிறது. மோசேயின் நாட்களின் போது கீழ்ப்படிதலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் ஏற்படும் விளைவுகளைப் பற்றி நியாயப்பிரமாணத்தில் அவர் உரைத்திருந்தார் (காண்க லேவியராகமம் 26:3-39; உபாகமம் 27:15-28:68). புதிய ஏற்பாட்டிலே, இயேசு தம்முடைய வசனத்திற்கு கீழ்படியாமலிருப்பதற்கும் கீழ்ப்படிவதற்கும் உள்ள வேறுபாடு என்பது, மணல்மேல் ஒரு வீட்டைக்கட்டி - அது இடிந்து போவதைக் காண்பதற்கும் - கற்பாறையின் மேல் ஒரு வீட்டைக் கட்டி, அது உறுதியாய் நிற்கும் என்ற நம்பிக்கையோடு இருப்பதற்கும் உள்ள வேறுபாட்டிற்கு ஒப்பாயிருக்கிறது என்று அறிவித்தார் (காண்க மத்தேயு 7:21-27).*

*பழைய ஏற்பாட்டு உதாரணங்கள். தேவனுடைய திருமணச் சட்டங்களை மீறினதால் விளைந்த பேரழிவுகளின் எண்ணற்ற உதாரணங்களை பழைய ஏற்பாடு தருகிறது. ஜலப்பிரளயத்தைக் கொண்டு வந்த மனிதகுலத்து சீர்கெட்ட நிலைமையின் முக்கிய அம்சமாக இருந்தது எதுவென்றால், "தேவகுமாரர்" "அதிக சௌந்தரியமுள்ள மனுஷகுமாரத்திகளை" திருமணம் செய்து கொண்டது தான் (ஆதியாகமம் 6:1-4). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் இஸ்ரவேல் பிரவேசிப்பதற்கு சற்று காலத்திற்கு முன்பு, இஸ்ரவேலின் ஆண்கள்,*

தங்களது விவாக வாக்குறுதிகளை மறந்துபோய், மோவாபிய பெண்களுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டதன் விளைவாக, வாதையினால் 24,000 இஸ்ரவேலர்கள் மாண்டனர் (எண்ணாகமம் 25:1-9). தாவீதின் விபச்சார பாவம் பேரழிவுகளை விளைவித்தது (2 சாமுவேல் 11; 12[5]). வடக்கு இராஜ்யமாகிய இஸ்ரவேலை கிட்டத்தட்ட அழித்துப்போட்ட பாகால் வணக்கம் என்பது, மொத்தத்தில், வெளிநாட்டவரை கலப்பு திருமணம் செய்வது தேவனால் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் (காண்க யாத்திராகமம் 34:16; உபாகமம் 7:3, 4), யேசபேலை ஆகாப் திருமணம் செய்ததின் விளைவாக ஏற்பட்டது தான் (1 இராஜாக்கள் 16:29-33). பாபிலோனிய சிறையிருப்பிற்கு பின்னரும் கூட, யூதர்கள் தொடர்ந்து தங்கள் இளவயதின் மனைவியரை விட்டுவிட்டு புறமதத்தவரை திருமணம் செய்கிறவர்களாயிருந்தனர் - யூத தலைவர்களின் அவசர நடவடிக்கை மட்டும் இல்லாதிருந்தால், இந்தப் பழக்கம் தீவிர அழிவிற்கு கொண்டு போயிருக்கும் (எஸ்றா 9:10; மல்கியா 2:10-16 ஒப்பிடுக).

தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட தம்பதியரைப் பற்றிய எடுத்துக்காட்டுகளையும் கூட பழைய ஏற்பாடு அளிக்கிறது: ரூத்தும் போவாஸும் (ரூத் 4:13-22; மத்தேயு 1:5, 6), அன்னாளும் எல்க்கானாவும் (1 சாமுவேல் 1), நோவாவும் அவரது மனைவியும் (ஆதியாகமம் 6-10).

*புதிய ஏற்பாட்டு உதாரணங்கள்.* புதிய ஏற்பாட்டில், விபச்சாரத்தில் ஈடுபட்டு தேவ கட்டளையை மீறுகிறவர்கள் நித்திய தண்டனையால் பயமுறுத்தப்படுகிறார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 21:8; எபிரெயர் 13:4). மாறாக, பெற்றோருக்கு கீழ்ப்படியும்படியான தேவ புத்திமதிகளை அனுசரிப்பவர்களுக்கு ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப் பட்டிருக்கின்றன (எபேசியர் 6:1-3). கிறிஸ்தவ மனைவிமார் தங்கள் கணவன்மாருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்கிற தேவனுடைய அறிவுரைகளைக் கடைப்பிடிப்பதன் காரணமாக, அவர்களது கணவன்மார்கள் கிறிஸ்துவண்டை மனமாற்றம் பெறுவதைக் காணும் பாக்கியம் பெறலாம் (1 பேதுரு 3:1, 2).

இவையன்றி, திருமணத்திற்கான தேவனுடைய வழிகாட்டுதல்களுக்கு கீழ்ப்படிந்து ஆசீர்வாதமடைந்த மற்றும் கீழ்ப்படியாமற்போய் சாபமடைந்தவர்களைப் பற்றிய உதாரணங்களை புதிய ஏற்பாடு தந்திடாமல் குறிப்பால் உணர்த்துகிறது. திருமணம் பற்றிய தேவனுடைய விதிமுறைகளை அனுசரித்த விசுவாசமுள்ள தம்பதியர் பாராட்டப்பட்டுள்ளனர். சகரியாவும் எலிசபெத்தும் தங்கள் முதுவயதிலும் ஓர் மகனைப் பெற்று தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டனர் (லூக்கா 1:5-25, 57-66). ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தாங்கள் செய்த நன்மைகளெல்லாவற்றிற்காகவும் பவுலால் பாராட்டப் பெற்றனர் (ரோமர் 16:3, 4). மரியாளும் யோசேப்பும் தேவனுடைய பிரமாணங்களுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து கர்த்தரின் பூமிக்குரிய பெற்றோராயிருக்கும் பாக்கியம் பெற்றனர் (மத்தேயு 1:18-25). அதுபோலவே, தங்கள் விவாகத்தில் தேவனுடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் விவாகரத்து எனும் பேரழிவை தவிர்த்திடுவதோடல்லாமல், தேவ வசனத்திற்கு தாங்கள் கீழ்ப்படிந்திருப்பதால் ஆசீர்வாதத்தையும் பெறுகிறார்கள்.

## முடிவுரை

உல்லாசக் கப்பல் *டைட்டானிக்,* முதல் பயணமாய் இங்கிலாந்தின்

*சௌத்தாம்ப்டன் துறைமுகத்திலிருந்து 1912, ஏப்ரல் 10ம் நாள் கிளம்பியபோது, அது மூழ்காது எனக் கருதப்பட்டது. இருப்பினும் இரண்டு நாள் பயணத்திலேயே அது ஒரு பனிப் பாறையில் மோதி மூன்று மணி நேரத்திற்குள்ளாக மூழ்கி, சுமார் ஆயிரத்து ஐநூறு உயிர் இழப்பிற்கு வழிவகுத்து விட்டது. டைட்டானிக் கப்பலேறும் கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்ற ஒருவருமே அந்த பயணத்தின் பேரழிவான முடிவை எதிர்பார்க்கவில்லை என்றபோதிலும் அது நிகழ்ந்தது.*

*அநேக இளம்தம்பதியர் வாழ்க்கைப் பயணத்தை ஒன்றாய் ஆரம்பிக்கையில், தங்கள் விவாகம் மூழ்கடிக்கப்படாதது என்ற எண்ணத்தில் பயணித்து, தாங்கள் கடக்க நினைக்கும் "கடலிலே" "பனிப் பாறைகள்" உண்டென்பதை பின்னர் தான் கண்டுபிடிக்கிறார்கள். வாழ்க்கையில் ஆபத்தான இடையூறுகளை நாம் தவிர்த்திடாத பட்சத்தில் அவை விவாகத்தை கிழித்து எறிந்துவிடும். ஒவ்வொரு தம்பதியருக்கும் ஓர் வரைபடம் தேவை - அந்த இடையூறுகள் எங்கேயிருக்கின்றன என்பதைக் காட்டவும், அந்த இடையூறுகளை தவிர்க்க உதவி செய்வதற்காகவும், ஓர் கணவனும் மனைவியும் அப்படிப்பட்ட வரைபடத்தை எங்கே காணமுடியும்? ஒரே ஒரு இடத்தில் மட்டும்: பெரும் சேதத்தைத் தவிர்ப்பதற்கான தேவவழிகாட்டுதல்கள் அவரது புத்தகமாகிய வேதாகமத்தில் காணப்படுகிறது!*

*விவாகத்தை செயல்படுத்துவது எவ்வாறு என்பதைப் பற்றி அறிவுரையைக் கேட்டுக் கொண்டிருக்கையில் எல்லாவற்றிற்கும் மேலான ஓர் அதிகாரி அளித்திட்ட புத்தகமாகிய வேதாகமத்தின் அடிப்படையில் உங்கள் விவாகத்தை அமைத்திட வேண்டியது அவசியமாயிருக்கிறது. உங்கள் விவாகம் வெற்றிபெற வேண்டுமென விரும்பினால் தேவவாக்கியங்களை வாசியுங்கள், அதற்கு கீழ்ப்படியுங்கள்! தேவ வசனம் உங்கள் வாழ்விற்கு வழிகாட்டி, உங்கள் விவாகத்தை முறைப்படுத்துவதாக!*

---

*குறிப்புகள்*

*[1]பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பலதாரமணம் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருந்தாலும், மத்தேயு 19ல் இயேசுவானவர் கூறியபடி, அது திருமணத்திற்கான தேவனுடைய பூர்வீக திட்டத்தின் ஓர் அங்கமல்ல. மாறாக அது ஆண்களின் மனக்கடினத்தின் நிமித்தமாக பழைய ஏற்பாட்டு யுகத்தில் தேவனால் அனுமதிக்கப்பட்ட ஒன்றாயிருந்தது (மத்தேயு 19:8) [2]எடுத்துக்காட்டாக ஓரினச்சேர்க்கையினை வேதாகமம் கண்டிக்கிறது (ரோமர் 1:27; 1 கொரிந்தியர் 6:9, 10). அது பலதார மணத்தினைக் கண்டிப்பதையும் கருத்தால் உணர்த்துகிறது. எவ்வாறெனில் மத்தேயு 19:4-6ல், புருஷன் தன் "மனைவிகளோடு" (பன்மையில்) இசைந்திருப்பான் என்றில்லாமல், தன் "மனைவியோடு" (ஒருமையில்) இசைந்திருப்பான் என்றுதான் இயேசுவானவர் குறிப்பிட்டிருக்கிறாரே. [3]உண்மையிலே, திருமணத்திற்கு தயாராகும் ஜோடிகள், பிரசங்கியார்களிடமும், மூப்பர்களிடமும் மற்றும் கிறிஸ்தவ ஆலோசகர்களிடமும் சென்று நல்ல ஆலோசனைகளைப் பெற்றிட வேண்டும். [4]தேவனுக்கு கீழ்ப்படியும் தம்பதியருக்கு எல்லா பிரச்சனைகளும் தடுக்கப்பட்டு விடும் என்று சொல்வதற்கு இல்லை. [5]குறிப்பாக 2 சாமுவேல் 12:11, 12ஐயும், அதனைத் தொடர்ந்து வந்த இஸ்ரவேலின் வரலாற்றையும் கண்ணோக்கவும்.*